**ஹல்துமுல்ல பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹல்துமுல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹல்துமுல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தீர்மானிக்கப்பட்ட ரூபா 1,890,700 பெறுமதியான கட்டடம் மற்றும் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும்போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,394,212 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் தளாபடமும் பொருத்திகளும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 469,300 ஆன சுகாதார உபகரணங்கள் மற்றும் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 68,778 ஆன மின்சார துணைப்பாகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நானாவித செலவினம் ரூபா 1,183,812 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும்போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | நிலுவை வருமானத்தை அறவிடுதல் தொடர்பாக நீதிமன்றத்தில் காணப்படுகின்ற இரண்டு வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்குகளில் உள்ளடக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் என 06 விடயங்களில் நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரமான மீதிக்கும், பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 9,224,986 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரிசெய்யப்படும். | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 89,862,707 ஆன சொத்துக்கள் மற்றும் 08 பொறுப்பு விடயங்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கை, நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சொத்துக்களுக்குரிய பட்டோலை மற்றும் உரிய தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 24 ஆம் பிரிவு | பிரதேச சபையின் வீதிகள் மற்றும் துணை வீதிகள் தொடர்பாக பெயர் பதிவேடொன்று நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. | சபைக்குரிய சொத்துக்கள் தொடர்பாக பதிவேடொன்று நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 104(4) | 2022 டிசம்பர் 09 ஆம் திகதி விபத்துக்குட்பட்டிருந்த கெப் வண்டி தொடர்பான விபத்து ஏற்பட்டு 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 26/92 | சபைக்குரிய 14 வாகனங்களில் அரச இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் வாகனத்தின் கதவில் பொறிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் வாகனத்தில் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு சொந்தமான சகல வாகனங்களினதும் அரச இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,251,679 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,196,570 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம ான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 3,006,119 | 3,620,519 | 2,886,334 | 734,185 | 2,759,810 | 3,238,446 | 2,009,918 | 1,228,528 |
| (ii) | வாடகை | 4,206,100 | 5,253,537 | 4,486,651 | 766,886 | 2,619,900 | 2,691,367 | 2,254,307 | 437,060 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 837,100 | 2,331,937 | 2,331,937 | - | 781,350 | 1,050,661 | 1,215,506 | (164,845) |
| (iv) | ஏனைய வருமானம் | 6,761,750 | 11,025,736 | 10,785,366 | 240,370 | 3,940,569 | 4,630,231 | 4,417,207 | 213,024 |
| | மொத்தம் | 14,811,069 | 22,231,729 | 20,490,288 | 1,741,441 | 10,101,629 | 11,610,705 | 9,896,938 | 1,713,767 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை கடை வாடகை ரூபா 441,272 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடை வாடகை அறிவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,400,170 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 17,558,078 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் இந்த பணத்தை தீர்த்துக் கொள்வதற்கு கோரப்பட்ட போதும் இந்த கட்டணத்தை அறவிடுதல் தொடர்ச்சியாக தாமதமடைந்து காணப்படுகின்றது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | உட விகாரகல பார்வையாளர் மேடை மற்றும் அதன் மலசலகூடம் தொடர்பாக 2019, 2020 மற்றும் 2021 என்ற 03 | நிலுவை வாடகையில் ரூபா 12,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

ஆண்டுகளுக்காக 2019 பெப்ரவரி 06 ஆம் திகதி வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 297,276 அறவிடப்பட்டிருக்க வில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,892,539 செலவில் கழிவுப்பொருள் மீள்சூழற்சி பொருள் சேகரித்தல் களஞ்சிய அறை ஒன்று கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலைய வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கழிவுப் பொருள் மீள்சூழற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுகள் நிலையத்தின் வளவில் முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மே மாதம் 28 ஆம் திகதி இடம் பெற்ற வாகன விபத்து தொடர்பாக காப்புறுதி மூலம் மீளளிப்பு செய்ய முடியாத நிதி நட்டமான ரூபா 80,000 மற்றும் 25 சதவீதமான அரசாங்கத்தின் மேலதிகக் கட்டணம் என்பவற்றை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மீளளிப்பு செய்ய முடியாத நிதி நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 மார்ச் 31 ஆம் திகதி சபை நிதியத்தின் கீழ் மதகொன்று நிர்மாணிப்பதற்கும் மற்றும் குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்கும் முற்பணமாக ரூபா 110,000 அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலைகள் நிறைவேற்றப் படாதிருந்ததுடன் முற்பணமும் தீரத்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்ட பூர்த்தி பெறுமதியுடன் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முற்பணம் பெற்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹல்துமுல்ல பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள உட தியலும எல்ல சார்ந்த காணி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரியதாக 2022 டிசம்பர் நடைபெற்ற மாவட்ட இணைப்பு குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது உட தியலும எல்ல சுற்றுலா வலயத்தில் அமைந்துள்ள 13 ஏக்கர் 02 ரூட் 03 பேர்ச் காணி அளவிடப்பட்டு வரைபடமிடுவதற்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 187,000 செலவிடப்பட்டிருந்தது. | காணியின் உரித்தை தீர்த்து வைக்குமாறு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் கோரப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் பதிலளிக்கப்படவில்லை . | காணியைக் கையேற்று அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |